2018 ஜூலை 3] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ஆகிய 3 அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) என மொத்தம் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் 3 கோடியே 8 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரண பெட்டகம் வழங்குதல், கோவை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகங்களுக்கு கட்டடங்கள், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு கட்டடங்கள், விழுப்புரம் மற்றும் சேலம் மாவட்டங்களில் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்கள் அமைத்தல் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு மருத்துவக் கருவிகள் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்.*

1. கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் முதற்கட்டமாக, 25,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தலா 2,000/- ரூபாய் மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகம் 5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பெட்டகத்தில் பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு தலைக்கவசம், பளிச்சிடும் மேலங்கி, கையுறைகள் மற்றும் பாதுகாப்பு கண்ணாடிகள் இருக்கும்.

2. கோவையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகங்களுக்கு 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழ்நாட்டில் தற்போதுள்ள 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில், 29 அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூலை 3

அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலமாக, 32 மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்களை, தற்போது 5 மண்டல இணை இயக்குநர்கள் கண்காணித்து வருகின்றனர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்களை திறம்பட நிருவகிக்கவும், கண்காணிக்கவும், விழுப்புரம் மற்றும் சேலம் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்கள் நடப்பாண்டில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு 7 கோடி ரூபாய் செலவில் “சி.டி. ஸ்கேன் கருவி” வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் அவசர சிகிச்சைப் பிரிவு (ICU) உருவாக்கப்படும். 75 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலுள்ள ஆய்வகங்களில் 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் “செமி ஆட்டோ அனலைசர், பைனாகுலர் மைக்ரோஸ்கோப், இ.சி.ஜி. இயந்திரம்” போன்ற புதிய உபகரணங்கள் வழங்கப்படும். தொழிலாளர்களுக்கு சிகிச்சைக்காக வழங்கப்படும் உயர் மருந்துகளை பாதுகாப்பாக வைக்கும்பொருட்டு, 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 4 மண்டல நிருவாக மருத்துவ அலுவலகங்களில் குளிர்சாதன அறை மற்றும் ஜெனரேட்டர் கருவிகள் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்து, அமருகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வணிக வரி மற்றும் பதிவுத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, என்னவென்று சொல்லுங்கள்.